பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை 09.01.2022 கதிர் 293

## நாளை முதல் மின் வெட்டு!

நாளை முதல் மின்வெட்டு அமுல்படுத்தப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை (ஜனவரி 10) முதல் மின்வெட்டை அமுல்படுத்த இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனபடி, ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் மின் வெட்டு இடம்பெறும்.

# சகல உள்ளூராட்சி சபைகளின் பதவி காலமும் 1 வருடம் நீடிப்பு!

## அடுத்த வாரத்தில் வர்த்தமானி அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 09

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மேலும் ஒரு வருடத்துக்கு பிற்போடுவது தொடர்பான வர்த்த மானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் வெளியி டப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கமைய தற்போதைய உள்ளூராட்சி சபை களின் பதவிக் காலம் மேலும் ஓராண்டுக்கு நீடிக் கப்படும்.

இன்றைய நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர் தலை பிற்போடுவதானால் அது தொடர்பான வர்த்த மானி அறிவித்தல் மாகாண சபைகள் மற்றும் உள் ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் வெளியிடப்பட வேண் டும்.

☞ 2

## அமைச்சரவை மாற்றமா? ஆயத்தம் ஏதுமில்லையாம்

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதுவ ரையில் அவதானம் செலுத்தவில்லை என ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாளைய தினம் அமைச்சரவை

☞ 2

## சீன வெளிவிவகார அமைச்சர் கோட்டா, மஹிந்தவுடன் பேச்சு



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு நேற்றிரவு இலங்கை வந்த சீன வெளி விவகார அமைச்சர் வாங் யீ இன்று இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்தார்.

சீன வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் அடங்கிய விசேட விமானம் ஒன்று நேற்று இரவு இலங்கை வந்தடைந்தது.

அவரது குழுவினரை அமைச்சர்

☞ 2

## அரசியல் சூழ்ச்சியில் இறங்கியிராவிட்டால் இன்றும் மைத்திரிதான் நாட்டின் ஜனாதிபதி



அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தால் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக் கப்பட்டது. 20 மூலம் அது நீக்கப்பட்டது. அதனால் ஏற்பட்டுள்ள அவல நிலையை மக்கள் இன்று உணர ஆரம்பித்துள்ளனர். இந்த உண்மையைதான் மைத்திரி இன்று கதைக்கின்றார். ஆனால் 52 நாள்கள் அரசுக்கு அவர் அரசியல் சூழ்ச்சி செய்திருக்காவிட்டால், இன்றும் அவரே ஜனாதிபதி.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ் ணன் இவ்வாறு தெரிவித்தார்.

நுவரெலியாவில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்திய பிரதமருக்கு அனுப்படவுள்ள கூட்டு ஆவணத்தில் நாம்

☞ 2



## புதிய கூட்டணிக்கு சந்திரிகா ஆயத்தம்?

எதிர்வரும் நாள்களில் கொழும்பு அரசியலில் அதிரடி மாற்றம் ஏற்படவுள்ளதாகவும், சந்திரிகா அமைக்கவுள்ள புதிய கூட்டணியில் அமைச்சர்கள் பலர் இணையவுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் அவரது தந்தை பண் டாரநாயக்கவின் நினைவேந்தல்

☞ 2



## யாழ்ப்பாணத்தில் சஜித்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜன. 09

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரு மான சஜித் பிரேமதாஸ இன்றைய தினம் யாழ்ப்பாணத்தின் பல் வேறு பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

☞ 2

## விபத்துகளில் ஐவர் மரணம்

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் பாட சாலை மாணவன் ஒருவர் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மஹவ, கெத்தபஹூவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத் தில் 12 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

☞ 2

## நாட்டு மக்களோ பெரும் நெருக்கடியில் அரசோ பேரினவாதத் தீவிரப் போக்கில்!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

கொழும்பு,ஜன. 09

இலங்கையில் பல்வேறு அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலை யில் அவற்றைச் சீர்செய்து, நாட்டின் நிர்வாகத்தைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக, சிறுபான்மையின மக்களை இலக்குவைத்து வெறுப்புணர்வைப் பரப்புவதன் மூலம் பேரினவா தத்தை ஊக்குவிப்பதிலேயே ராஜபக்ஷ அரசாங்கம் கவனத்தைக் குவித்திருக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம்

☞ 2

## காஸ் சிலிண்டர்கள் லொறியை துரத்திச் சென்ற டயானா எம்.பி.

நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நீங்கவில்லை, சிலிண் டர்களுடன் மக்கள் வரிசையாக நிற்பதும் குறையவில்லை. இந் நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே, காஸ் சிலிண்டர்கள் ஏற்றிச்சென்ற லொறியை பின்னால் துரத்திச்சென்று. காஸ்சிலிண்டர் ஒன்றைப் பெற்றுள்ளார்.

அவருடைய வீட்டில் பயன்படுத்தப்பட்ட சமையல் எரிவாயு முடிவடைந்து விட்டது. அதைத் தேடிக்கொண்டு வீதியில் அலைந்து திரிந்துள்ளார்.

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## நாட்டு மக்களோ பெரும் நெருக்கடியில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசனம் வெளியிட்டுள்ளது.

நாட்டின் தேசிய ஆங்கிலப் பத்திரிகையொன்றில்'அரிசிக்கான தட்டுப்பாட்டினால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள்' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த ஆசிரியர் தலையங்கத்தை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கக்கூடிய பதிவிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப்பிராந்தியப்பணிப்பாளர் மீனாட்சி கங்குலி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்ற சூழ்நிலையில், அவற்றுக்குத் தீர்வை வழங்கக்கூடிய வகையிலான சிறந்த தீர்மானங்கள் எவையும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. பல வாரங்களாக நீடிக்கும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு வெகுவிரையில் முடிவிற்கு வருவதாகத் தெரியவில்லை.

இதில் தலையீடுசெய்து பிரச்சினைக்குத் தீர்வை வழங்குமாறு பொதுமக்கள் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற போதிலும், எந்தவொரு முன்னேற்றகரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அந்த ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் வெகுவிரையில் பொது மக்களின் வீடுகளில் சமைப்பதற்கு அவசியமான பொருள்கள் இல்லாமல்போகக் கூடும் என்பதால், சமையல் எரிவாயுவிற்கான தேவையும் இல்லாமல்போகலாம். குறிப்பாக அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன் அவற்றின் விலைகள் அநேகமான மக்களால் கொள்வனவு செய்யமுடியாத அளவிற்கு உயர்வடைந்துள்ளன.

தற்போது மதுபானம் மற்றும் சிகரெட் மாத்திரமே தட்டுப்பாடின்றிக் கிடைக்கின்றன என்று மேற்படி ஆங்கிலப்பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், உரப்பற்றாக்குறை காரணமாக விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லமுடியாத நிலையிலிருக்கின்றனர்.

அதன் விளைவாக அரிசி உள்ளடங்கலாக நாட்டின் தேசிய உற்பத்தி வீழ்ச்சி கண்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த ஆசிரியர் தலையங்கத்தை மேற்கோள்காட்டி மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப்பிராந்தியப்பணிப்பாளர் மீனாட்சி கங்குலி அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் கூறியிருப்பதாவது:

இலங்கையானது எரிபொருள் உள்ளடங்கலாகப் பல்வேறு அத்தியாவசியப் பொருள்களிலும் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டின் சீரான நிர்வாகத்திலும் மனித உரிமைகளை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக இன மற்றும் மதரீதியான சிறுபான்மை மக்களை இலக்குவைத்து வெறுப்புணர்வைப் பரப்புவதன் ஊடாக பேரினவாதத்தை ஊக்குவிப்பதிலேயே ராஜபக்ஷ அரசாங்கம் கவனத்தைக் குவித்திருக்கின்றது' - என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அரசியல் சூழ்ச்சியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்பமிடாவிட்டாலும், தமிழ்த் தேசியக்கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். அவர்களின் நடவடிக்கைக்கு எதிராக நாம் நிற்கமாட்டோம் என்றார் அவர்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த அரசுக்குள், அரசியல் ரீதியிலும் தற்போது நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளார். மறுபுறத்தில் மைத்திரிபால சிறிசேனவும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். எனவே, அரசு வெகுவிரைவில் கவிழும் என்பதையே நாட்டில் இடம்பெறும் அரசியல் சம்பவங்கள் மூலம் உணர முடிகின்றது.

எதிர்காலத்தில் புதிய கூட்டணிகள் உருவாகலாம். புதிய பயணம் பற்றி மைத்திரிபால சிறிசேனவும் கருத்து வெளியிட்டுள்ளார். அந்தவகையில் நாமும் தேர்தலுக்கு தயாராகவே இருக்கின்றோம். தேர்தலை மட்டும் எதிர்ப்பார்த்து வருபவன் தலைவன் கிடையாது, நாளைய சமுதாதாயம் பற்றிச் சிந்திப்பவனே உண்மையான தலைவன். அவ்வாறானவர்களுக்கே நாம் ஆதரவு வழங்க வேண்டும்.

அதேவேளை, தமிழ் பேசும் கட்சிகள் இணைந்து கலந்துரையாடல்களை நடத்தியிருந்தன. அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பை பெறுவதற்கே ஆரம்பத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன் பின்னர் சமஷ்டி, சுயநிர்ணயம் உள்ளிட்ட விடயங்களும் உள்வாங்கப்பட்டன. இதனால் மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகள் ஆவணத்தில் கையொப்பமிடவில்லை.

ஆனாலும் தமிழ்த்தேசியக்கட்சிகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு நாம் முழு ஆதரவை வழங்குவோம். அதற்கு தடையாகவோ - எதிராகவோ நிற்கமாட்டோம். - என்றார்.

## சகல உள்ளூராட்சி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இங்கிலாந்தில் தங்கியுள்ள இராஜாங்க அமைச்சர் ரொான் ரணசிங்கவிற்கு கொவிட் - 19 தொற்றுறுதியாகியுள்ளமையினால் அவரால் தேர்தலை பிற்போடுவது தொடர்பான வர்த்தமானியை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அதிகார விடயங்களை அவரிடமிருந்து நீக்கி,வேறு அமைச்சரிடம் ஒப்படைத்து, அவரின் மூலம் இந்த வர்த்தமானி வெளியிடப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதியுடன் தற்போதைய உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் முடிவுக்கு வருகின்றது. அதையடுத்துத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் ஓராண்டு பிற்போடப்பட்டால் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி வரை இப்போதைய உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட முடியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால்ஆகக் கூடியது ஓராண்டு காலப்பகுதிக்கு மாத்திரமே பிறபோட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## காஸ் சிலிண்டர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், பெலவத்தையிலுள்ள முகவரிடம் காஸ் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. அங்குச் சென்றபோது காஸ் நிறைவடைந்தவிட்டது. அதன்பின்னர், அத்துருகிரியவில் காஸ் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. அங்கும் சென்றுள்ளார். ஆனால் காஸ் இல்லை.

அத்துருகியவில் நிற்கும் போது காஸ் சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு நீளமான லொறியொன்று சென்றுள்ளது. அந்த லொறியை துரத்திக்கொண்டு பின்னாலே சென்ற டயனா கமகே எம்.பி., ஒருவல பிரதேசத்துக்குச் சென்றுள்ளார்.

அங்குள்ள காஸ் முகவர் நிலையத்தில் சிலிண்டர்கள் இறக்கப்பட்டதன் பின்னர், சிலிண்டர் ஒன்றை வாங்கிக்கொண்டு வீடு திரும்பியுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புதிய கூட்டணிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இந்தச்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் மொட்டு நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்நிலையில், சந்திரிக்கா அமைக்கவுள்ள புதிய கூட்டணியில் அரசிலுள்ள பல அமைச்சர் இணையக்கூடுமெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## விபத்துகளில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வான் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி, மரத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் வானின் சாரதி, வானில் பின்னால் இருந்து பயணித்த பிக்கு உள்ளிட்ட 7 பேர் படுகாயமடைந்த நிலையில் கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பாடசாலை மாணவன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழுந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பன்னல பிரதேசத்தில் சுற்றுவட்டத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில் 28 வயதுடைய மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் உயிரிழந்துள்ளார்.

அதேபோல், ஹபரணை மொரகஸ்வெவ பிரதேசத்தில் 88 வயதான பெண் ஒருவர்பஸ்ஸில்மோதிஉயிரிழந்துள்ளார்.

மேலும், ஹுங்கம, படஹத பகுதியில் இனந்தெரியாத வாகனம் மோதியதில் 44 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மாத்தறையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலில் மோதி 54 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## சீன வெளிவிவகார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமல் ராஜபக்ஷ வரவேற்றார்.

சீன வெளிவிவகார அமைச்சர் இன்று இரவு கொழும்பு துறைமுக நகருக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது துறைமுக நகரத்தில் பல திறப்பு வைபவங்களில் அவர் கலந்துகொள்ள உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நாட்டின் உயர் அதிகாரிகள் சிலரையும் அவர் சந்திக்க உள்ளார்.

இதேவேளை, சீன - இலங்கை இராஜதந்திர உறவுகளின் 65வது ஆண்டு நினைவு தினம் இங்கு நினைவு கூரப்படுகிறது.

சீன வெளிவிவகார அமைச்சர் தனது இலங்கை விஜயத்தின் போது பல முதலீட்டு யோசனைகளை முன்வைக்கவுள்ளார் எனவுன் தெரிவிக்கப்படுகின்றது.

## அமைச்சரவை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றம் ஒன்று இடம்பெறுவதாக வெளியாகும் தகவல் தொடர்பில் வினவிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு அமைச்சரவை மாற்றம் மேற்கொள்வதென்றால் இதுவரையில் அதற்கான ஆயத்தங்கள் காணப்பட வேண்டும். எனினும் இதுவரையில் அவ்வாறான ஆயத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறும் என்றால் அது மிக சிறிய மாற்றமாகவே இருக்கும் எனவும், தற்போது அமைச்சரவை அமைச்சர் பதவி பெற்றுள்ளவர்களின் பதவிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படாதெனவும் அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று ஞாயிற்றுக்கிழமை நயினாதீவுக்கு விஜயம் செய்த சஜித் பிரேமதாஸா நாகவிகாரைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு விகாராதிபதியிடம் ஆசிகளை பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் விசேட வழிபாடுகளை மேற்கொண்டார்.

இதன்போது, சஜித் பிரேமதாஸவின் மனைவி ஜெலனி பிரேமதாஸா, மாத்தறை நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு அமைப்பாளர் உமாச்சந்திர பிரகாஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.









விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com

**சாரதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொழும்பு சென்று வரக்கூடிய கனரக வாகன சாரதி தேவை

தொடர்புகளுக்கு -
0770266833
0774449705

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மின்வெட்டு நெருக்கடி

இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அந்நிய செலாவணிக் கையிருப்பு இன்மை ஆகிய காரணங்களினால் நாட்டில் மீண்டும் பெரிய அளவில் மின்வெட்டு நடைமுறைக்கு வருவது – அதுவும் விரைந்து நடைமுறைக்கு வருவது – தவிர்க்க முடியாதது என இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் கூறுகின்றன.

தினசரி இரண்டரை மணிநேர மின்வெட்டை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவது தவிர்க்க முடியாதது என இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர், வலு சக்தி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருக்கின்றார்.

முற்பகல் 11 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையில் ஒரு மணி நேர மின்வெட்டும் –

அதேபோல இரவு 6 மணி முதல் 9 மணி வரையான உச்ச பயன் பாட்டு சமயத்தில் தலா 45 நிமிடங்கள் கொண்ட இரண்டு மின் வெட்டுகளையும் –

நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை பரிந்துரை செய்து இருக்கின்றது.

அதாவது –

நண்பகலுக்குப் பின்னர் ஒரு மணி நேரமும், இரவில் 6 மணி முதல் 9 மணி வரையான உச்ச பயன்பாட்டு வேளையில் ஒன்றரை மணி நேரமும் மின்வெட்டு நடைமுறைக்கு வரும் சாத்தியம் உண்டு.

நிலைமை இன்னும் மோசமடையுமானால் மின்வெட்டு நேரம் மேலும் அதிகரிக்கப்படும் நிலையும் உண்டு. அந்நிய செலவாணிகையிருப்பின்மைப்பிரச்சினையால் இலங்கை மின்சார சபைக்கு உரிய எரிபொருளை விநியோகிக்கும் பொறுப்பிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலகிக் கொண்டு விட்டது. அதனால் எரிபொருள் மூலமான மின் உற்பத்தி பெரும் பின்னடைவைக் கண்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது யூனிட் செயலிழந்துள்ளது. கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பகுதி, பராமரிப்புப் பணிகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளது. களனி திஸ்ஸ எரிவாயு மூலமான மின் உற்பத்தி நிலை யத்தின் இயந்திரங்களும் பழுதடைந்து நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றின் காரணமாக மின்வெட்டு தவிர்க்க முடியாது என மின்சார சபை வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த நெருக்கடிகள் தீர்க்கப்பட்டால் மின்வெட்டை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்பதை இலங்கை மின்சார சபை, அரசின் மேல் மட்டங்களின் கவனத்துக்கு நேரத்துடன் கொண்டு வந்து விட்டதாகவும் கூறப் படுகிறது. பராமரிப்பு நெருக்கடி, மின் உற்பத்தி மையங்களில் இயந்திரங்களில் பழுது, திடீரென ஏற்படக்கூடிய உற்பத்திக்கான எரிபொருள் தட்டுப்பாடு, மின் உற்பத்தி நிலையங்களுக்கான நீரேந்தும் பகுதிகளில் போதிய மழையின்மை, வறட்சி போன்ற இன்னோரன்ன காரணங்களினால் மின்வெட்டு ஏற்படுமானால் அதை மக்கள் சகித்துக் கொள்வர்; பொறுத்துக் கொள்வர்; நிலைமையை புரிந்து கொள்வர். அப்படி கடந்த காலங்களில் நிலைமையைப் புரிந்துகொண்ட மக்கள் உரிய ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

ஆனால் நிலைவரம் இப்போது அப்படிப்பட்டதல்ல. மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளுக்குத் தனும் போதிய அந்நிய செலாவணியை பெறமுடியாத கோட்டாபய அரசின் இயலாமையை ஒட்டித்தான் இந்த மின்வெட்டு என மக்கள் உணரும் போது, அந்த மின்வெட்டினால் அரசுக்கு எதிரான மக்களின் சீற்றம் பெரும் கொந்தளிப்பாக வெளிப்படும் என்பதும் ஊகிக்கத் தக்கதே.

அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாததால் ஏற்படக் கூடிய மின்வெட்டு ராஜபக்ஷக்களின் செல்வாக்கை இலங்கை அரசிய லில் இருந்து முற்றாக வெட்டித் துண்டாடி ஒதுக்கவும் வழிசெய்துவிடும் என்றே தோன்றுகின்றது.

# எமது நாட்டு மக்கள் படும் அவலத்தை பார்க்கும் போது மனம் கொதிக்கின்றது

## சஜித் வேதனை



நாட்டு மக்கள் படும் அவலத்தைப் பார்க்கும் போது உண்மையில் மனம் கொதிக்கிறது. என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு அவர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களே சிந்தித்துப் பாருங்கள். மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளைப் பெறுவதற்கு வரிசையில் நிற்கிறார்கள். இன்று குடிக்க பால் மா இல்லை. சமைக்க அரிசி இல்லை. விவசாயிகளுக்கான உரம் இல்லை.

மக்கள் படும் அவலத்தைப் பார்க்கும் போது உண்மையில் மனம் கொதிக்கிறது. எந்த நம்பிக்கையில் இப்படியான ஆட்சியாளர் களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குகிறார்கள். ஆட்சிக்கு வரும் போது என்ன கூறினார்கள்.

தேசிய பாதுகாப்புக்கு உத்தரவாதம். நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதம். இலவசமாக பலதையும் தருகிறோம் என்று கூறி இனவாதத்தைத் தோற்றுவித்து ஆட்சியைக் கைப்பற்றினார்கள்.

இன்று என்ன நடக்கிறது. உண்மையில் இந்த நாடு பெரிய பாதகமான அழிவை நோக்கிச் செல்கிறது. இப்படியாக நாடு பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது இந்த நாட்டை நாம் பாதுகாக்க வேண்டும்.

எதிர்வரும் எமது ஆட்சியில் எமது மக்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாங்கள் தயாராகி வருகின்றோம். இலங்கை ஓர் அபிவிருத்திப் பாதையில் செல்ல நாம் நகர்ந்து கொண்டிருக்கின்றோம்.

கடந்த 70 வருடமாக எதிர்க்கட்சி நாடாளுமன்றத்தில் இருந்து அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருந்தது. ஆனால் நாம் அதை மாற்றியமைத்து இருகின்றோம். எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களது தேவையறிந்து மக்களிடத்தில் செல்கின்றோம்.

கடந்த 30 வருடகால யுத்தத்தில் வடக்கு - கிழக்கு அதிகமாகப் பாதிப்படைந்திருந்தது. யுத்தம் முடிவடைந்த பின் அந்த பிரதேசம் பாதிப்படைந்திருந்தது. அதனை நாம் கட்டியெழுப்ப வேண்டும். முடிந்தால் அரசாங்கம் கட்டியெழுப்ப வேண்டும். அல்லது சர்வதேசத்தின் உதவியை நாட வேண்டும். ருவெண்டா நாட்டில் யுத்தம் நடந்தது.

8 லட்சம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. யுத்தம் முடிந்த பின் அந்த நாடு கட்டியெழுப்பப்பட்டது. ஆப்கானிஸ்தானிலும் அவ்வாறே நடந்தது. இன்று சர்வதேசத்துடன் தொடர்பு இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், வடக்கு - கிழக்கு கட்டியெழுப்பப்படவில்லை. வெறும் வாய்ப் பேச்சில் இருக்கிறார்கள். எமது அரசாங்கத்தின் ஆட்சி வரும் போது யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்கு - கிழக்குப் பகுதியைக் கட்டியெழுப்புவோம்.

எம்மால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் அரைகுறையாக இருக்கின்றன என சிலர் எம்மிடம் கேட்கிறார்கள். கடந்த தேர்தலில் இந்த நாட்டில் பெரும்பான்மையான மக்கள் இன்னொருவருக்கு தான் அதிகபடியான வாக்குகளை வழங்கி ஆட்சியைக் கொண்டு வந்திருந்தார்கள்.

அவர்கள் இந்த நாட்டுக்காக அந்த மக்களுக்காக வீட்டை பூர்த்தி செய்திருக்க வேண்டும். ஆனால் அதனை செய்யவில்லை. வஞ்சகத் தனம் காணப்பட்டது. எனவே, இவர்கள் இந்த நாட்டை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஆட்சி மலரும் போது வீட்டுத் திட்ட கனவு நனவாகும்.

மக்கள் எதிர்பார்ப்புடன் வாக்களித்தார்கள். அதை இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இதனை மக்கள் புரிந்துகொண்டு இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். - எனத் தெரிவித்தார்.

# மன்னார் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள்திருத்த பணிகள் ஆரம்பம்

## கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தகவல்



மன்னார் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள் திருத்த வேலைகள் மன்னார் மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ. மரின்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று (சனிக் கிழமை) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக் கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

மன்னார் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள் திருத்த வேலைகள் ஜனவரி மாதத்துக்குள் முடிவுறுத்தப்படவுள்ளமையால் உரிய நடைமுறைகளுடன் குறித்த திட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கமக்காரர்களிடம் மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கோரியுள்ளார்.

வயற் காணி இடாப்பு மீள்திருத்த வேலையின் பொருட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள 13 கமநல சேவைகள் நிலையங்களிலும் வயற்காணி பதிவேடுகளை விவசாயிகள் பார்வையிட முடியும்.

வயற்காணி பதிவேட்டில் திருத்தங்களை மேற்கொள்வதற்குக் கமக்காரர்கள் தங்கள் வயற்காணி அமைந்துள்ள கமநல சேவைகள் நிலையங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தேவையான ஆவணங்களுடன் கமநல சேவை நிலையங்களில் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் வயற்காணி பதிவைத் திருத்திக் கொள்ள முடியும்.

எதிர்பார்த்துள்ள தங்கள் காணி தொடர்பில் இதுவரை உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்காத கமக்காரர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து தங்கள் காணிப் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

வயற் காணி இடாப்பு மீள்திருத்தம் தொடர்பான மேலதிக விவரங்களைத் தங்கள் பகுதிக்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் அல்லது கமநல சேவைகள் நிலையங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள் திருத்த வேலைகள் ஜனவரி மாதத்திற்குள் முடிவுறுத்தப்படவுள்ளமையால் சுகாதார வழி காட்டல்களுக்கமைய கொவிட் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி இந்த வேலைத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அ.மரின் குமார் தெரிவித்துள்ளார்.

# கஜகஸ்தானின் ரஷ்ய துருப்புக்கள் ஏன்? அமெரிக்கா கேள்வி



கஜகஸ்தானின் இடம்பெற்றுவரும் அரசுக்கு எதிரான போராட்டங்களைச் சமாளிக்கவென ரஷ்ய இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது குறித்து அமெரிக்கா கேள்வி எழுப்பியுள்ளது.

கஜகஸ்தான் நெருக்கடிகளுக்கு ரஷ்யா உதவி இல்லாமலேயே அந்நாட்டு அரசால் தீர்வு காண முடியும் என நம்புவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

கஜகஸ்தானில் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ஆரம்பித்த பெரும் மக்கள் மக்கள் போராட்டம் அரசுக்கு எதிரான போராட்டமாக தொடர்ந்து வலுவடைந்து வருகிறது.

அரசின் முடிவை எதிர்த்து நாடு முழுவதும் மக்கள் திரண்டதால் வேறு வழியின்றி பிரதமர் அஸ்கர் மாமின் தலைமையிலான அரசு ராஜினாமாச் செய்துள்ளது.

இந்த ராஜினாமாவை கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் ஏற்றுக்கொண்டார்.

இதையடுத்து அந்த நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. மக்கள் நடமாட தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் எரிவாயு விலையை கட்டுப்படுத்துமாறு மாகாண ஆளுநர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே போராட்டக்காரர்களை முன்னெச்சரிக்கையின்றி கண்டவுடன் சுட கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினர் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு நடத்தி வருகின்றனர்.

கஜகஸ்தானில் போராட்டங்களைக் கட்டுப்படுத்த உதவுமாறு ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோக்காயேவ் விடுத்த அழைப்பை ஏற்று ரஷியாவில் இருந்து அமைதிப் படை களமிறக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலே கஜகஸ்தானில் ரஷ்ய இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளமை ஏன்? என்பது தெளிவாக தெரியவில்லை என வொஷிங்டனில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளிங்கன் கூறினார்.

அமைதிப் படை என்ற போர்வையில் சுமார் 2 ஆயிரம் 500 ரஷ்ய தலைமையிலான துருப்புக்கள் முதல் கட்டமாக கஜகஸ்தானில் தரையிறங்கியுள்ளன.

அமைதியை ஏற்படுத்தும் தற்காலிக ஏற்பாடாகவே ரஷ்யப் படைகள் கஜகஸ்தான் அனுப்பப்பட்டுள்ளதாக மொஸ்கோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் ரஷ்யர்களை உங்கள் நாட்டுக்கு அழைத்தால் மீண்டும் அவர்களை வெளியேற்றுவது கடினம் என்பதே சமீபத்திய கால வரலாற்றுப் பாடமாக உள்ளது என அண்டனி பிளிங்கன் குறிப்பிட்டார்.

எதிர்ப்புப் போராட்டக்காரர்களின் உரிமைகளை கஜகஸ்தான் மதிக்க வேண்டும். போராட்டக்காரர்களை கட்டுப்படுத்தும் திறனை கஜகஸ்தான் படைகள் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

இந்நிலையில் ரஷ்யப் படைகளை களமிறக்கி உள்ளமைக்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை. இது குறித்து நாங்கள் ஆராய்ந்து வருகிறோம் எனவும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அண்டனி பிளிங்கன் கூறினார்.



# யூதக் குடியேற்றங்களை எதிர்த்து பலஸ்தீனர் போராட்டம்!

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனம் மேற்குக் கரையில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் யூதக் குடியேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேல் படையினருக்கு இடையே நேற்று மோதல் இடம்பெற்றது.

மேற்குக் கரையில் யூதக் குடியேற்றங்களை விரிவுபடுத்துவதை எதிர்த்தும், பலஸ்தீனர்கள் தொடர்ந்து இஸ்ரேலியப் படைகளால் கைது செய்யப்படுவ தைக் கண்டித்தும் கடந்த சில வாரங்களாக பலஸ்தீனர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மேற்குக் கரையில் நேற்று இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீனர்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தியபோது பாலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியப் படையினருக்கும் இடையே மோதல் இடம்பெற்றது. இதனையடுத்து இந்தப் பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. இதேவேளை, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் நப்லஸ் பகுதியில் பலாடா அகதிகள் முகாமில் வியாழக்கிழமை இடம்பெற்ற சோதனையின்போது இஸ்ரேலியப் படைகளால் 21 வயதான பகீர் முகமது ஹாஷ் என்ற பலஸ்தீனிய இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற சில மணிநேரங்களுக்குப் பிறகு ஓர் இஸ்ரேலிய குடியேற்றவாசி தனது காரை ஏற்றி ஒரு பாலஸ்தீனியரைக் கொன்றார். 25 வயதான முஸ்தபா ஃபலானே என்பவரே கொல்லப்பட்டவராவார்.

# ஆப்கானிஸ்தானில் பட்டினி; மக்கள் அவதி



ஆப்கானிஸ்தானில் தலிபன்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஏற்பட்டுள்ள சூழ்நிலை உலகின் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தசாப்தத்தின் மோசமான வறட்சி காரணமாக இங்கு கோதுமை பயிரின் கால் பகுதி சேதமடைந்து விட்டது. கூடவே 2 கோடியே 30 லட்சம் மக்கள் கடுமையான குளிர்காலத்தில் பட்டினிப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர்.

மறுபுறம் இங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் மேற்கத்திய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் நிதியுதவி நின்றுவிட்டதால் பொருளாதாரம் நெருக்கடிக்குள்ளாகி அரச ஊழியர்களின் ஊதியம் நிறுத்தப்பட்டுள்ளது. நிலைமை இயல்பாகுமா? அது எப்போது நடக்கும் என்று கூட மக்களுக்குத் தெரியாது.

இந்த நிலையில், பட்டினியின் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தான் மக்கள் கடும் அவதிக்குள் உள்ளாகியுள்ளனர்.

# கூகுள் வரைபடத்தில் சிக்கிய இத்தாலியின் மாஃபியா தலைவர்

பல ஆண்டுகளாக பல்வேறு சட்ட முகாமைகளிடமிருந்து தப்பி ஓடிக் கொண்டிருந்த ஒரு இத்தாலிய மாஃபியா தலைவர், கூகுள் மேப் மூலம் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

கியாச்சினோ கம்மினோ என்கிற 61 வயதான நபர், ஸ்பெயின் நாட்டிலுள்ள கலபகர் என்கிற பகுதியில் கண்டறியப்பட்டுள்ளார். அங்கு தான் அவர் மேனுவல் என்கிற பெயரில் வாழ்ந்து வந்தார்.

கூகுள் ஸ்ட்ரீட் வியூ தளத்தில் இருந்த படத்தில், கியாச்சினோ கம்மினோவைப் போல ஒருவர், மளிகைக் கடை முன் தோற்றமளிப்பதாக பின்தொடர்ந்த போது தான், அவர் மாஃபியா தலைவர் என உறுதி செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார். அப்படம் தான் அவரது கைதுக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது என விசாரணை அதிகாரிகள் கூறினர்.

கடந்த 2002ஆம் ஆண்டு கியாச்சினோ கம்மினோ ரோம் நகரத்தின் சிறையிலிருந்து தப்பினார். கொலை குற்றத்தில் ஈடுபட்டதற்காக, அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அவர் ஸ்டிடா என்றழைக்கப்பட்ட சிசிலியன் மாஃபியா குழுவின் உறுப்பினர், மேலும் இத்தாலியில் தீவிரமாகத் தேடப்பட்டு வந்த அடிதடி நபர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



கியாச்சினோ கம்மினோ ஸ்பெயின் நாட்டில் பதுங்கி இருக்கிறார் என சிசிலிய பொலிஸார் நம்பியது. ஆனால் அவர் ஒரு நபரோடு, எல் ஹர்டோ டெ மனு அல்லது மனுஸ் கார்டன் கடைக்கு வெளியே பேசிக்கொண்டிருப்பது போன்ற படம் தான் உடனடியாக விசாரனையை ஆரம்பிக்கக் காரணமாக அமைந்தது.

கொசினா டி மனு என்கிற தற்போது செயற்பாட்டில் இல்லாத உணவகத்தின் ஃபேஸ்புக் பக்கத்தில் தான் அவரது அங்க அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. அப்பக்கத்தில் கியாச்சினோ கம்மினோ ஓர் உணவு தயாரிக்கும் கலைஞர் ஆடையில் இருந்தார். அவரது தாடைப் பகுதியில் இருந்த தழும்பை வைத்து அவர்தான் தேடப்பட்டு வந்த குற்றவாளி என அடையாளம் காணப்பட்டது. அது போக, அந்த உணவகத்தின் உணவுப் பட்டியலில் சிசிலிய உணவுகள் இருந்தன.

அவர் கடந்த டிசம்பர் 17ஆம் தேதி கைது செய்யப்பட்டார், ஆனால் கடந்த புதன்கிழமை தான் லா ரிபப்ளிகா பத்திரிகையில் செய்தி வெளியானது.

கைதான கியாச்சினோ கம்மினோ, என்னை எப்படி கண்டுபிடித்தீர்கள்? நான் என் குடும்பத்தினரை கூட கடந்த 10 ஆண்டுகளாக அழைத்துப் பேசவில்லை என பொலிஸாரிடம் கேட்டார் எனக் கூறப்படுகிறது.

தற்போது கியாச்சினோ கம்மினோ ஸ்பெயின் நாட்டில் காவலில் இருக்கிறார். அவர் பெப்ரவரி மாத இறுதிக்குள் இத்தாலிக்கு அழைத்து வரப்படலாம் என, இத்தாலிய பொலிஸார் மாஃபியா பிரிவின் துணை இயக்குநர் நிகோலா அல்டியரோ ராய்டர்ஸ் செய்தி முகமையிடம் கூறினார்.

# தேர்தல் நடக்கும் மாநிலங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்தத் தடை




உத்தரப்பிரதேசம், பஞ்சாப், கோவா, மணிப்பூர் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் மார்ச் 7ஆம் திகதி வரை ஏழு கட்டங்களாக சட்டமன்றத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

உத்தரப் பிரதேசத்தில் ஏழு கட்டங்களாகவும். உத்தரகாண்ட், கோவா, பஞ்சாப் மாநிலங்களில் பெப்ரவரி 14 ஆம் திகதி ஒரே கட்டமாகவும், மணிப்பூரில் பெப்ரவரி 27 மற்றும் மார்ச் 3 என இரண்டு கட்டங்களாகவும் தேர்தல் நடக்கவிருக்கிறது. இதற்கான அறிவிப்பை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா வெளியிட்டுள்ளார். கொரோனாப் பரவலைக் கருத்தில் கொண்டு, தேர்தல் பிரசாரங்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அறிவித்துள்ள தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா, கொரோனா பரவல் அதிகரித்து வருவதால், தேர்தல் நடைபெறும் ஐந்து மாநிலங்களில் ஜனவரி 15 ஆம் திகதி வரை தேர்தல் பொதுக்கூட்டங்கள், வீதி நிகழ்வுகள் மற்றும் தெரு முனைப் பிரசார கூட்டங்கள் போன்றவற்றை நடத்தத் தடை விதிக்கப்படுகிறது.

ஜனவரி 15 ஆம் திகதி கொரோனாப் பாதிப்புகள் மற்றும் கள நிலவரத்தை தேர்தல் ஆணையம் மதிப்பாய்வு செய்து, பொதுக்கூட்டங்களை அனுமதிப்பது தொடர்பாக முடிவு செய்யும். கொரோனாக் கட்டுப்பாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்படாவிட்டால், அந்தக் கட்சிகளின் பொதுக்கூட்டங்களைத் தடை செய்ய தேர்தல் ஆணையம் தயங்காது.

வீடுவீடாக பிரசாரம் செய்ய 5 நபர்களுக்கு மேல் செல்லக்கூடாது. பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் மக்களுக்கு கட்சிகள் சார்பில் முகக் கவசங்கள், தொற்று நீக்கித் திரவங்களை வழங்கவேண்டும். தேர்தலுக்கு பிந்தைய வெற்றிக் கொண்டாட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வெற்றிச் சான்றிதழை பெறுவதற்கும் வேட்பாளருடன் 2 நபர்கள் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவார்கள், என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமருக்கு என்ன பாதுகாப்புக் குறைபாடு? பஞ்சாப் முதலமைச்சர் சரண்ஜித் சிங் கேள்வி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த 5 ஆம் திகதி பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூருக்கு பயணம் மேற்கொண்டபோது, விவசாயிகள் போராட்டம் காரணமாக பயணத்தில் தடையேற்பட்டு, மேற்கொண்டு பயணிக்க முடியாமல் டெல்லிக்கு திரும்ப நேர்ந்தது. இந்த பாதுகாப்பு சிக்கல் விவகாரம் அரசியல் ரீதியாகவும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த விடயம் தொடர்பாக பஞ்சாப் மாநில காங்கிரஸ் அரசிடம் இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் உடனடி அறிக்கையை அனுப்புமாறு கோரியது. இதுகுறித்து விசாரிக்க அமைச்சரவைச் செயலகத்தின் செயலாளர் சுதிர்குமார் சக்சேனா தலைமையில் உளவுப்பிரிவு இணை இயக்குனர் பல்பீர்சிங், சிறப்பு பாதுகாப்பு குழு ஐ.ஜி. சுரேஷ் ஆகியோர் அடங்கிய குழுவை இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் நியமித்தது.

அந்தக் குழு நேற்று பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூருக்கு நேரில் சென்று விசாரணையை ஆரம்பித்தது. பாதுகாப்பு குளறுபடி குறித்து ஆய்வு மேற்கொண்டது. மேம்பாலத்தில் சுமார் 45 நிமிடங்கள் முகாமிட்டு விசாரணையை நடத்தியது.

இந்த நிலையில், நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த பஞ்சாப் முதலமைச்சர் சரண்ஜித் சிங் சன்னி,



பிரதமர் இருந்த ஒரு கிலோமீற்றர் எல்லைக்குள் எந்த போராட்டக்காரர்களும் நுழையவில்லை. பிரதமரின் பாதுகாப்புக்காக 6 ஆயிரம் பாதுகாப்புப் பணியாளர்களும், சிறப்புப் பாதுகாப்புப் படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இப்படியிருக்கையில் பிரதமருக்கு என்ன ஆபத்து வந்திருக்கும் என தெரியவில்லை.

பஞ்சாப்பில் பிரதமருக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. அவர் முற்றிலும் பாதுகாப்பாக இருந்தார். யாரும் அவருக்கு அருகில் செல்லவில்லை. இதுதொடர்பாக நான் பிரியங்கா காந்தியுடன் உரையாடினேன். நடந்த சம்பவத்தை விளக்கிக் கூறியுள்ளேன். - என தெரிவித்திருக்கிறார்.

## மலைக்கு வருபவர்களின் மாரடைப்பைக் தடுக்க திருப்பதியில் விலையுயர்ந்த ஊசி



திருப்பதியில் ஏழுமலையானை தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு அவசர காலங்களில் மருத்துவ உதவிக்காக, திருப்பதியில் உள்ள ரூயா மருத்துவ மனையின்கீழ் டெனெக்டேஸ் பிளஸ் என்ற ஊசி மருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. மாரடைப்பு மூலம் இறப்பு ஏற்படுவதை தடுக்கும் இந்த மருந்தை செயல் அலுவலர் ஜவகர் ரெட்டி அறிமுகப்படுத்தியுள்ளார்.

திருப்பதி கோவிலுக்கு பாத யாத்திரையாக வரும் பக்தர்கள் சிலர் மாரடைப்பால் அவதிப்படுகின்றனர். அவர்களுக்கு ஏற்படக்கூடிய இறப்பைத் தடுக்க, இந்த விலை உயர்ந்த தடுப்பூசி இலவசமாக வழங்கப்படுவதற்குத் தயார் நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதய இரத்த நாளங்களில் இரத்தம் உறைதல் போன்ற பிரச்சினைகளால் மாரடைப்பு ஏற்பட்டால் இந்த ஊசி மூலம் உடனடிப் பாதுகாப்பு கிடைக்கும் என்றும், தென்னிந்தியாவில் ரூயா மருத்துவமனை மட்டுமே இந்தத் திட்டத்தை அமல்படுத்தியுள்ளதாகவும், திருப்பதியைச் சுற்றியுள்ள 13 இடங்களில் இந்த ஊசி செலுத்துமிடங்களிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தையில் இந்த ஊசியின் விலை 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபா வரையாக இருப்பதாகவும், மக்களின் அவசர சிகிச்சைக்கு பயன்படுத்தும் பொருட்டு திருப்பதி தேவஸ்தானம் இந்த ஊசியை மருத்துவ மனையில் இலவசமாக செலுத்தும் வசதியை ஏற்படுத்தியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்கள் ஒத்திவைப்பு கொரோனாத் தடுப்பு நடவடிக்கையாக அறிவிப்பு

விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்கள் உட்பட அனைத்து குறை தீர்க்கும் நாள் கூட்டங்களும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகின்றன என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு கட்டமாக, தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்று பரவலை கருத்தில் கொண்டு, அனைத்து மாவட்டங்களிலும் திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்கள் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்களும் இதற்குள் அடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## அன்னை தெரேசா சேவை மையத்தின் அனுமதி உரிமம் புதுப்பித்து இயங்க ஆரம்பம்

அன்னை தெரசாவின் சேவை மையம் உள்ளிட்ட 75இற்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் அனுமதியை இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் புதுப்பித்துக் கொடுத்துள்ளது.

மேற்கு வங்கம் கொல்கத்தாவில் இயங்கி வரும் அன்னை தெரேசாவின் சேவை மையத்திற்கு வழங்கப்பட்டிருந்த வெளிநாட்டு நிதி உதவியைப் பெறுவதற்கான அனுமதியை புதுப்பித்துத் தர, இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த மாதம் மறுப்பு தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆவணங்களைச் சரிவர சமர்ப்பிக்கவில்லை என்பதுதான் இதற்கான காரணமாக சொல்லப்பட்ட நிலையில், அரசியல் களத்தில் பெரும் அதிர்வலைகளை இந்த விவகாரம் ஏற்படுத்தியிருந்தது. கிறிஸ்மஸ் தினத்தில் அன்னை தெரசா சேவை மையத்தின் வங்கிக் கணக்குகள் மத்திய அரசினால் முடக்கப்பட்டன எனவும் அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதையடுத்து வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெறுவதற்கான அனுமதியை புதுப்பிக்க, உரிய ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்கு, சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவனங்களுக்கு மீண்டும் இந்திய மத்திய உள்துறை அமைச்சகத்தால் அவகாசம் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் தற்போது இந்த அனுமதி புதுப்பித்துத் தரப்பட்டுள்ளதாகவும், அன்னை தெரசாவின் சேவை மையத்தைத் தவிர, ஜெயநியூ பல்கலைக்கழகத்தின் சேவை மையம், டெல்லி பல்கலைக்கழகத்தின் சேவை மையம் உள்ளிட்ட 25 இற்கும் அதிகமான தொண்டு நிறுவனங்களின் அனுமதியும் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர்களுக்கு எங்கள் நாட்டில் பலவகையான அச்சுறுத்தல்கள் உள்ளன

## சாணக்கியன் தெரிவிப்பு

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கு பல அச்சுறுத்தல் இருக்கும் காலப்பகுதியில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிகம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் லசந்த விக்கிரமதுங்கவின் 12 ஆவது நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு தூபியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது .இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், கொழும்பிலே இருக்கும் பல ஊடகங்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பத்திரியையாளர்களை அரசு தமது வியாபாரிகளை விட்டு அனைத்தையும் கைப்பற்றும் சில நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் பல சிரேஷ்ட ஊடகவியலாள்களுக்கு தொலைபேசி அழைப்புக்களை விடுத்து நீங்கள் இவ்வாறான வேலைகளை தொடர்ச்சியாக செய்வீர்களானால் உங்களை வேலையில் இருந்து நீக்கவேண்டிவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகின்றோம்.

2022 ஆம் ஆண்டிலே ஜனாதிபதியாக இருக்கும் அவர்தான் அன்று பாதுகாப்பு செயலாளராக இருந்தார். அவர் 2009 ஆம் ஆண்டு லசந்த கொல்லப்பட்டதன் பிறகு கொடுத்த பேட்டி ஒன்றை பார்த்திருந்தேன் அப்போது யார் இந்த லசந்த என்று கேட்டிருந்தார்.

எனக்கும் அவருக்கும் எதுவித பிரச்சினையும் இல்லை. ஆனால், அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய இருக்கின்றேன் என்றவர் தான் இன்று நாட்டிலே ஜனாதிபதியாக இருக்கின்றார். அவருக்காக வழக்கு பேசிய அலி சப்ரி தான் இந்த நாட்டிலே நீதி அமைச்சராக இருக்கின்றார்.

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் பல அச்சுறுத்தல் இருக்கும் அப்படியான காலப்பகுதியில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் லசந்த மட்டுமல்ல 44 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் இவர்கள் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். அதேவேளை பொலிஸாரால் லசந்த கொலை தொடார்பாக வழக்குத் தொடரவில்லை.

இருந்தபோதும் நல்லாட்சி அரசாங்கத்தில் கூட அந்த வழக்கை ஆரம்பித்தாலும் திருப்திகரமான முடிவை எந்த அரசாங்கமாக இருந்தாலும் பெற முடியவில்லை என்பது கவலையான விடயம்.




எனவே, இனிவரும் காலங்களிலாவது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் கொலை செய்யப்பட்டவர்களுக்கு அரசாங்காத்தாலோ நீதிமன்றத்தாலோ தண்டனை வழங்காவிட்டாலும் இறைவன் தண்டணை வழங்குவான் எனத் தெரிவித்தார்.

மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
இல.266, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 197 1667, 077 316 4796

மணமகள் விவரம்

பிறந்த திகதி-05.04.1994 மதம்-இந்து
ஜாதி-V பெண் நட்சத்திரம்- திருகோணம்
கி.பா-14 செவ்-9இல்
தகைமை-M.B.B.S தொழில்-Doctor
எதிர்பார்ப்பு-மணமகன் பொருத்தம் பரணி, புனர்பூசம், கேட்டை, பூராடம்

பிறந்த திகதி-02.08.1993 மதம்-இந்து
ஜாதி-V பெண் நட்சத்திரம்-திருகோணம்
கி.பா-28 செவ்-8இல்
தகைமை-Bsc Software eng தொழில்-Singapore
எதிர்பார்ப்பு-இலங்கை மணமகன்

பிறந்த திகதி-03.09.1992 மதம்-இந்து
ஜாதி-V பெண் நட்சத்திரம்-விசாகம் 4
கி.பா-20 செவ்-12இல்
தகைமை-M.B.B.S தொழில்-Doctor
எதிர்பார்ப்பு-Doctor மணமகன்

பிறந்த திகதி-24.07.1998 மதம்-இந்து
ஜாதி-V பெண் நட்சத்திரம்-மகம்
கி.பா-9 செவ்-6இல்
தகைமை-Bsc தொழில்-Australia
எதிர்பார்ப்பு-Doctor Eng மணமகன்

பிறந்த திகதி-26.11.1992 மதம்-இந்து
ஜாதி-K பெண் நட்சத்திரம்-மூலம்
கி.பா-75 செவ்-7இல்
தகைமை-G.C.E. A/L தொழில்- Company
எதிர்பார்ப்பு- அரச சேவை தனியார் மணமகன்

பிறந்த திகதி-29.07.1996 மதம்-இந்து
ஜாதி-V பெண் நட்சத்திரம்-பூராடம் 1
கி.பா-18 செவ்-9இல்
தகைமை-M.B.B.S தொழில்- Doctor
எதிர்பார்ப்பு-Doctor Australia மணமகன்

பிறந்த திகதி-04.11.1986 மதம்-இந்து
ஜாதி-V பெண் நட்சத்திரம்-அனுசம்
கி.பா-29 செவ்-5இல்
தகைமை-B.A தொழில்- அரசசேவை
எதிர்பார்ப்பு-அரசசேவை மணமகன்

பிறந்த திகதி-29.09.1989 மதம்-இந்து
ஜாதி-V பெண் நட்சத்திரம்-புனர்பூசம் 3
கி.பா-18 செவ்-சூரிய 12
தகைமை-Accountant தொழில்- Accountant
எதிர்பார்ப்பு- Australia மணமகன்

மணமகன் விவரம்

பிறந்த திகதி-16.06.1989 மதம்-இந்து
ஜாதி-V ஆண் நட்சத்திரம்-விசாகம் 5'9"
கி.பா-28 செவ்-9இல்
தகைமை-CIMA தொழில்-Accountant Australia
எதிர்பார்ப்பு-Australia இலங்கை பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி-22.09.1989 மதம்-இந்து
ஜாதி-V ஆண் நட்சத்திரம்-மிருகசீரிடம் 3
கி.பா-28 செவ்-சூரி 12 இல் 6"
தகைமை-Bsc.
எதிர்பார்ப்பு-பட்டதாரிஅரச வேை மணமகள்

பிறந்த திகதி-31.05.1978 மதம்-இந்து
ஜாதி-V ஆண் நட்சத்திரம்-உத்தரட்டாதி
கி.பா-24 செவ்-9இல்
தகைமை-கணனி பொறியியலாளர்
தொழில்-நிறுவன பங்காளர்
எதிர்பார்ப்பு-A/L படித்த மணமகள் தேவை

பிறந்த திகதி-30.04.1992 மதம்-இந்து
ஜாதி-V ஆண் நட்சத்திரம்-உத்தரட்டாதி
கி.பா-33 செவ்-2 இல்
தகைமை-Electronic eng தொழில்-விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு-பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி-25.03.1988 மதம்-இந்து
ஜாதி-K ஆண் நட்சத்திரம்-திருவாதிரை
கி.பா-59 செவ்-8 இல்
தகைமை-G.C.E.A/L தொழில்-(France) PR
எதிர்பார்ப்பு-France PR உள்ள K மணகள் தேவை

பிறந்த திகதி-19.05.1985 மதம்-இந்து
ஜாதி-V ஆண் நட்சத்திரம்-பரணி
கி.பா-62 செவ்-சூரி 2 இல்
தகைமை-G.C.E.A/L தொழில்-கட்டிட ஒப்பந்தம்
எதிர்பார்ப்பு-A/Lபடித்த மணமகள் தேவை

பிறந்த திகதி-25.11.1988 மதம்-இந்து
ஜாதி-V ஆண் நட்சத்திரம்-மிருகசீரிடம்(2)
கி.பா-53 செவ்-சூரி 2 இல்
தகைமை-E.eng தொழில்-நிறுவன உரிமையாளர்
எதிர்பார்ப்பு-A/Lபடித்த மணமகள்

பிறந்த திகதி-09.02.1989 மதம்-இந்து
ஜாதி-V ஆண் நட்சத்திரம்-உத்தரட்டாதி
கி.பா-35 செவ்-7 இல்
தகைமை-.B.B.A தொழில்-ஆசிரியர்
எதிர்பார்ப்பு-பட்டதாரி அரசசேவை மணமகள்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzelan- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடல்

மட்டக்களப்பு கோறளைப்பற்று பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். பணியாளர் ஒருவர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கண்டித்தும் சந்தேக நபர் கைது செய்யப்பட வேண்டும் தமக்கு நீதி வேண்டும் எனத் தெரிவித்தும் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக அறிந்த இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் சம்பவ இடத்துக்கு வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களது கோரிக்கையைக் கேட்டறிந்து கொண்டார்.

இந்த விடயத்திற்கு தீர்வு காணும் முகமாக வாழைச்சேனை பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். மேற்படி விடயம் தொடர்பாக இராஜங்க அமைச்சர் தலைமையில் பிரதேச சபை சபா மண்டபத்தில் தவிசளார் திருமதி சோபா ஜெய ரஞ்சித் வாழைச்சேனை உதவி பொலிஸ் அதிகாரி பிரதேச சபை ஊழியர்கள் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

## ஆவணங்களின்றி குடியிருக்கும் காணிகளுக்கான முக்கிய விசாரணை

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நீண்ட காலமாக முறையான காணி ஆவணங்கள் இன்றிக் குடியிருக்கும் மற்றும் விவசாய செய்கைகளில் ஈடுபட்டு வருவோருக்கான காணி ஆவணத்தை வழங்குவதற்கான ஆரம்பக் கட்ட காணி விசாரணைகள் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆரம்ப கட்ட காணி விசாரணைகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரனின் தலைமையில் பிரதேச செயலக காணிப் பிரிவினால் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்று வருகின்றன

அரசின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் நீண்ட காலமாக முறையான காணி ஆவணங்கள் இன்றி குடியிருப்போர் மற்றும் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் 1618 நபர்கள் தமக்கான காணி ஆவணத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் விண்ணப்பங்களை திருக்கோவில் பிரதேச செயலகத்தில் வழங்கி இருந்தனர்.

அந்தவகையில் காணி ஆணையாளரின் 2008/04ஆம் இலக்க சுற்று நிருபத்துக்கு அமைவாக திருக்கோவில் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக காணி ஆவணம் கோரி விண்ணப்பத்தவர்களுக்கான ஆரம்ப கட்ட காணி விசாரணைகள் சட்டம் மற்றும் சமுக நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் இம்மாதம் 06ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி 09ஆம் திகதி வரை திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Arunthathee

# அருந்ததியின் மாற்றுமோதிரம்

## பிரம்மாண்டமான BRIDAL FASION SHOW

## நாளை!

இருமணம் இணையும் அழகிய தருணம் திருமணம். அத்தகைய திருமணம் நல்லபடியாக அமைந்துவிட்டால் வாழ்க்கையும் அழகிய தருணங்களாகும். அன்பான வாழ்க்கைத்துணை அமைந்தால் வாழ்க்கை அழகானதாக அமையும். அப்படி அன்பான வாழ்க்கைத்துணைகளை தேட உதவிக்கரம் நீட்டி பலரின் வாழ்க்கையை அழகாக்கிவருகின்றது அருந்ததி. இது பயன்பெற்ற பல வாடிக்கையாளர்களின் கருத்துப் பதிவுகளாகும். பயனாளர்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை அனுபவங்களும் கருத்துப்பதிவுகளும் எம்மை நெகிழச்செய்கின்றன. அருந்ததியின் அளப்பரிய சேவையின் பூரணத் தன்மையை இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

வெறுமனே திருமண சேவையோடு நின்றுவிடாது வரன் தேடுவோம் வாருங்கள், மாற்று மோதிரம் திருமணக்கண்காட்சி மற்றும் மணப்பெண் அலங்கார காட்சி, மண மக்கள் அறிமுகத்தோடு பட்டிமன்றமும் இடம்பெறுகின்ற கெட்டிமேளம் தொலைக்காட்சி நிகழ்வு, மாதமிருமுறை திருமணபருவ இதழ் வெளியீடு என எந்தவொரு தி ருமண இணைய சேவையும் இதுவரை செய்திராத பல நிகழ்வுகளை ஒழுங்கமைத்து அதிக பயனாளர்களை இணைத்துக்கொண்டு புதியதொரு வெற்றிப் பாதையில் தொடர்ந்தும் பயணித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு மிகப்பெரிய எடுத்துகாட்டு இந் நிகழ்வுகள் எவ்வித தடைகளுமின்றி புதுப்புது விடயங்களை தழுவி இன்னும் வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதாகும். புதிதாக அருந்ததியை அறிந்துகொள்பவர்களுக்கு அருந்ததி வழங்கும் சேவைகள் என்ன என்ன என்பதை முழுமை யாக விளங்கிக்கொள்ளவே கீழ்வருமாறு விடயங்களை விளக்கிக்காட்டியுள்ளோம்.

### அருந்ததியின் பிரம்மாண்டமான மாற்று மோதிரம் திருமணக்கண்காட்சி....

வரன் தேடுவதாக இருந்தாலும் சரி திருமண ஏற்பாடாக இருந்தாலும் சரி தனக்கென தனி முத்திரை பதித்த அருந்ததி நிறுவனத்தின் ஏற்பாட்டின் கீழ் வருடந்தோறும் நடைபெறும் பிரம்மாண்ட நிகழ்ச்சியே மாற்று மோதிரம் திருமணக்கண்காட்சி மற்றும் மணப்பெண் அலங்கார காட்சி. அந்தவகையில் மணப்பெண் அலங்கார காட்சியை மையப்படுத்தி இவ்வருடம் நடைபெறவுள்ள மாற்றுமோதிரம் நிகழ்வு பல சிறப்பு மற்றும் பிரதம அதிதிகளின் வருகையோடு மிகவும் பிரம்மாண்டமாக நாளை (10.01.2022) மாலை நான்கு மணியளவில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் **(BMICH)** இல் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது. இன, மத, மொழி வேறுபாடற்று நாடுபூராகவுமுள்ள 50 இற்கும் மேற்பட்ட நிபுணத்துவம் வாய்ந்த அழகுக்கலை நிபுணர்கள் பலர் இதில் பங்குபற்றவுள்ளனர். மணப்பெண் அலங்காரக்காட்சியோடு ஏனைய விடே நிகழ்வுகளையும் தழுவி நடைபெறவுள்ளது. இந் நிகழ்வு வெற்றிகரமாக நடைபெறும் என்பதற்கு சான்று அருந்ததி மேல் நம்பிக்கை கொண்டு பேரதரவு தந்த திருமணசேவை வழங்குனர்கள், அழகுக்கலை நிபுணர்கள், பயனாளர்கள் மற்றும் ஊழியர்கள் என அனைவரும் தான்.

குறிப்பாக இந் நிகழ்விற்கு பிரதான அனுசரணையாளர்களாக **Sri Vijayas** ஆடையகம் மற்றும் **Joy Glorious** நகையகம் ஆகியன கரம் கோர்த்துள்ளள. அத்தோடு சாரி ப்ளவுஸ் மற்றும் ஆரி வேலைப்பாடுகளுக்காக **The Beads** உம் அலங்கார வேலைப்பாடுகளுக்கான **Shahana Flowers** உம் புகைப்பட ஒழுங்கமைப்புகளுக்காக **3ADs Photography** உம் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்களாக இணைந்துள்ளனர். மேலும் ஊடக அனுசரணையாளர்களாக வீரகேசரிப்பத்திரிகை மற்றும் **Capital Tv & FM** ஒத்துழைப்பு வழங்குகின்றனர். இந் நிகழ்வு நேரலையாக ஊயிவையட வுஎ யில் ஒளிபரப்பப்படவுள்ளது.




Fabulous Fashian Show with inpiring ideas
மாற்று மோதிரம்
COLOMBO 2022
BRIDAL
FASHION SHOW
MONDAY
Jan 10 2022
at 4 o' clock in the evening
at BMICH (Mihilaka Medura)
Contact 076 975 9197
Main Sponsors
SRI VIJAYAS
Your Family Shop
JOY GLORIOUS
(Pvt) Ltd
Official Partners
THE Beads
Aari Studio
SHAHANA FLOWERSHOP
Official Media Partners
வீரகேசரி
Capital
Capital
TELEVISION

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தற்சார்புப் பொருளாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்த களத்தில் இறங்கவுள்ளோம்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் உறுதி



(இ.கலையமுதன்)

வெளிநாடுகளை நம்பி இருக்காது எமது பகுதியில் உள்ள வளங்களை நாங்கள் பயன்படுத்த வேண்டும். நாம் வெறுமனே கோரிக்கையை மாத்திரம் விடாது தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் களத்தில் இறங்கவுள்ளோமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொருளாதார நிலை பற்றி சிந்திக்க வேண்டிய நிலையில் தமிழ் சமூகம் காணப்படுகின்றது. டொலரின் கையிருப்பு மிகவும் குறைந்து வருகின்றது. நாட்டினுடைய பொருளாதாரம் பற்றி அபாயகரமான கருத்துக்கள் வெளியாகி வருகின்றன.

பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் கார்டியன் பத்திரிகை இந்த வருடத்தில் இலங்கை திவாலாகும் என்ற விடயத்தை வெளிப்படுத்தியுள்ளது. கார்டியன் பத்திரிகையில் உள்ள விடயங்கள் இலங்கையில் நிதர்சனமாகி வருகின்றன. அது மாத்திரமல்லாமல் கார்டியன் பத்திரிகையினுடைய கருத்தை உறுதிப்படுத்துவது போல அரிசி உற்பத்தியாளர் சங்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் இலங்கையில் அரிசி ஒரு கிலோ 300 ரூபாவைத் தாண்டும் என்று தெரிவித்துள்ளது. இதைவிட இலங்கை பஞ்சத்துக்கு தள்ளப்படும் என்றும் எதிர்வு கூறியுள்ளது.

இதை வெறுமனே இலங்கைக்கு மட்டுமான பாதிப்பாகக் கருதிவிட முடியாது. ஏனென்றால் இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழ்த் தேசம் மிக மோசமாக ஓரவஞ்சனையாக அரசாங்கத்தால் நடத்தப்படும் என்பது தெரிந்த விடயம். பஞ்சம் ஏற்பட்டால் எதிர்காலத்தில் அதை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதில் நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற வகையில் எங்களுடைய மக்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. அந்த வகையில் நாங்கள் எங்களுடைய மக்களை பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படைகளான விவசாயம், மீன்பிடியில் தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை விருத்தி செய்ய வேண்டும்.

இதை செய்யாவிட்டால் எங்களுடைய தமிழ் மக்கள் மிக மோசமான நிலைமையை நோக்கித் தள்ளப்படுவதை எவராலும் தடுக்க முடியாது. ஆகவே வடக்கு விவசாய அமைப்புகள், கால்நடை அமைப்புகள், இளைஞர் கழகங்கள், சமூக அமைப்புகள் எல்லாம் இதற்கு முன்வரவேண்டும்.

வீட்டிலேயே தோட்டம் செய்யக்கூடிய வசதியுள்ளவர்கள் தங்களால் பயிரிடக்கூடிய பயிர்களை வீட்டுத் தோட்டத்தில் பயிரிட வேண்டும். விவசாயிகள் தங்களால் முடிந்த அளவுக்கு விவசாய உற்பத்திகளைச் செய்து சேமித்து வைக்க வேண்டும். அதிலும் குறிப்பாகக் குறுங்கால பயிர்களை மேற்கொள்ளவேண்டும். ஏப்ரல் மாதம் சிவப்பு எச்சரிக்கை காட்டப்பட்டுள்ள நிலையில் சில மாதங்களுக்குள் பயன்தரக்கூடிய குறும்பயிர்களை விவசாயிகள் பயிரிடவேண்டும்.

வெளிநாடுகளை நம்பி இருக்காது எமது பகுதியில் உள்ள வளங்களை நாங்கள் பயன்படுத்த வேண்டும். நாம் வெறுமனே கோரிக்கையை மாத்திரம் விடாது தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை இளைஞர் அணியைக் களத்தில் இறக்கி ஈடுபடவுள்ளது.

அந்தந்த பிரதேசங்களில் மூலப்பொருள்களைக் கொண்டு முடிவுப் பொருளை உற்பத்தி செய்வதற்காக சிறு கைத்தொழிலை ஆரம்பிக்கவுள்ள ஆர்வமுடைய இளைஞர்களுக்கு சரியான செயல் திட்டங்களுடன் எம்மைத் தொடர்பு கொள்ளலாம். அதற்கான வசதிகளை உதவிகளையும் வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

வீட்டுத் தோட்டங்களில் சிறு பயிர்கள் செய்ய விரும்புபவர்கள் எமது பிரதேச அமைப்பாளர்கள் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எதிர்காலத்தில் வர இருக்கும் இந்த இக்கட்டான பொருளாதார நெருக்கடியில் தமிழ் பேசும் தரப்பு தப்பிப் பிழைக்க வேண்டுமாக இருந்தால் விவசாயம் மீன்பிடி கைத்தொழில் போன்றவற்றில் பொருளாதாரக் கட்டமைப்பை நாங்கள் வெளிப்படுத்துவது தான் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் என்பதை உறுதியாக நம்புகின்றோம். - என்றார்.

# நாட்டில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் விபத்துக்கள் பொது மக்களுக்கு சுகாதார அமைச்சு எச்சரிக்கை

இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விபத்துக்களால் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுபவர்கள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை தொடர்பாக சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொற்றா நோய்கள் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சமித சிரிதுங்க இது தொடர்பாக எச்சரிக்கையினை வெளியிட்டுள்ளார்.

சுமார் 35 ஆயிரம் பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதுடன், நாளாந்தம் 35 பேர் விபத்துக்கள் காரணமாக உயிரிழக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டுதோறும், நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் 60 முதல் 70 லட்சம் பேர் சேர்க்கப்படுகின்றனர். இதில் 13 லட்சம் பேர் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என அந்த வைத்தியர் தெரிவித்துள்ளார்.

தங்கள் கணக்கீடுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் வைத்தியசாலைகளில், சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 50 லட்சமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதாவது ஐந்தில் ஒருவர் விபத்துக்களால் காயமடைய வாய்ப்புள்ளதாகவும் தொற்றா நோய்கள் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சமித சிரிதுங்க தெரிவித்துள்ளார்.

# மாலைத்தீவு கடற்பரப்பில் மீன்பிடி படகு கவிழ்ந்தது!

## ஐவர் மீட்பு; ஒருவர் மாயம்

மாலைத்தீவு கடற்பரப்பில் மீன்பிடி படகு ஒன்று கவிழ்ந்ததில் 6 இலங்கையர்கள் நீரில் மூழ்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுள் ஐவர் காப்பற்றப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், ஒருவர் நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# முல்லை மாவட்ட வைத்தியசாலை பெண் சிற்றூழியர்மீது மாங்குளம் வீதியில் காட்டுப்பகுதியில் வைத்து தாக்குதல்



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிற்றூழியராகக் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவர் மீது ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் காட்டுப்பகுதியில் வைத்துத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு ஊழியர் மீது எதோ ஒரு திரவத்தை வீசி தாக்குதல் மேற்கொண்ட நிலையில் கண்கள் பாதிக்கப்பட்ட அவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தூர பிரதேசங்களில் இருந்து வனப் பகுதிகளைக் கடந்து பணிக்கு வரும் ஊழியர்களை கடும் அச்சத்தில் தள்ளியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்-

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றி வருகின்ற பெண் சிற்றூழியர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தன்னுடைய கடமைகளை நிறைவு செய்து நேற்று அதிகாலை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இருந்து கொக்காவில் வீதி துணுக்காய் எனும் முகவரியில் அமைந்திருக்கின்ற தன்னுடைய வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் ஒட்டுசுட்டான் நகரத்தை தாண்டி மாங்குளம் நோக்கி சென்று கொண்டிருந்த போது வனப்பிரதேசத்தில் வீதியில் நின்ற இருவர் குறித்த ஊழியர் மீது ஏதோ ஒரு திரவத்தை வீசியுள்ளனர்.

இதனால் கண்கள் பாதிக்கப்பட்ட அந்த ஊழியர் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் செல்ல முடியாத நிலையில் அருகில் இருந்த ஒரு பொதுக் கிணற்றில் சென்று முகத்தை கழுவிய போதும் கண்ணில் பார்வை சீராகாத நிலையில் குறித்த பகுதியில் இருந்த ஒரு வீட்டில் தஞ்சம் அடைந்து அங்கிருந்து அவசர தொலைபேசி ஊடாக நோயாளர் அம்புலன்ஸை அழைத்து மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்றார்.

இந்நிலையில் அவருடைய கண்களில் பார்வை பிரச்சினை ஆகியுள்ள நிலையில் என்ன திரவம் வீசப்பட்டுள்ளது என்பது தொடர்பில் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான பின்னணியில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மாங்குளம் மல்லாவி துணுக்காய் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் சுமார் 20 வரையான ஊழியர்கள் குறிப்பாக பெண் ஊழியர்கள் மேற்படி பகுதிகளை கடந்து வனப்பகுதி ஊடாக பல்வேறு அச்சத்துக்கு மத்தியிலும் காட்டு யானைகள் அச்சுறுத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் வைத்தியசாலையில் கடமையாற்ற வருகை தந்து கொண்டிருக்கின்ற போது இவ்வாறான ஒரு தாக்குதலை எதிர்கொண்டுள்ளமை மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாக்குதல் முயற்சி திருடர்களா அல்லது கொலை முயற்ச்சியா அல்லது என்ன நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்டது என்பது தெரியாத நிலையில் ஊழியர்கள் மிகவும் அவதிக்குள்ளாகி உள்ளதோடு பாதிக்கப்பட்ட பெண் தான் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வேலைக்கு வருகிறார் எனவும் இவ்வாறான சம்பவம் இன்னும் தன்னை அச்சத்துக்குள்ளாகியுள்ளதாகவும் தான் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார் எனவும் தன்னைத் தன்னுடைய கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு வைத்தியசாலைக்கு கடமைக்கு மாற்றி தருமாறும் தன் மீதான இந்தச் செயற்பாடு தாக்குதலா அல்லது கொலை முயற்சியா என்பது தெரியாத நிலையில் அவ்வாறான செயற்பாட்டிற்கு ஒரு நீதியான விசாரணையை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி ஊழியர் மாவட்ட வைத்தியசாலையில் உள்ள பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்திருக்கும் நிலையில் தற்போது யாழ்ப்பாணம் மாவட்ட வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.01.2022இல் வெளியிடப்பெற்றது